1ST INTERNATIONAL RESEARCH CONFERENCE ON PERFORMING AND VISUAL ARTS

JUICE - 2024
"Striving for Excellence"

Under the Sphere of

Jaffna University International Research Conference - 2024

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை

## சேர்.பொன்னம்பலம் இராமநாதன் ஆற்றுகை மற்றும் காண்பியக் கலைகள் பீடத்தின் முதலாவது பன்னாட்டு ஆய்வு மாநாடு

# “ஆக்கக் கலைகளில் சமகாலச் சவால்கள்”

26.07.2024

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமானது தமிழ் மக்களின் கலை பாரம்பரியத்தைப் பேணும் ஓர் உயர் கல்வி நிறுவனமாகும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமானது பொன்விழாவினைக் கொண்டாடுகின்ற அதேவேளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஒரு கலை பண்பாட்டு மையமாகத் திகழ்கின்ற இராமநாதன் நுண்கலைக்கழகமானது ஈழத் தமிழர்களின் தொன்மை மிகு கலைகளை மேம்பாடடையச் செய்வதுடன் தமிழ் மக்களின் தனித்துவம், அடையாளம் என்பனவற்றை மேம்படுத்துதல் மற்றும் அவற்றைப் பரவச் செய்தல் என்பனவற்றினை ஆதாரமாகக் கொண்டு கற்றல் கற்பித்தலின் ஊடாக இவற்றினை வெளிப்படுத்துகின்றது. இராமநாதன் நுண்கலைக்கழகம் (Ramanathan Academy) என்று மக்களால் பொதுவாக அறியப்பட்ட இந்நிறுவனமானது புதிய பீடமாகத் தரம் உயர்த்தப்பட்டு “சேர் பொன்னம்பலம் இராமநாதன் ஆற்றுகை மற்றும் காண்பியக் கலைகள் பீடம்” (Sir Ponnambalam Ramanathan Faculty of Performing and Visual Arts) என்ற பெயருடன் இசைத்துறை, வாத்திய இசைத்துறை, நடனத்துறை, நாடகமும் அரங்கக் கலைகளும் துறை, ஓவியத்துறை மற்றும் சிற்பத்துறை ஆகியவற்றைத் தன்னகத்தே கொண்டு இயங்கிவருகின்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொன்விழா ஆண்டினையும் இராமநாதன் நுண்கலைக் கழகத்தின் வைரவிழா ஆண்டினையும் சிறப்பிக்கும் முகமாக சேர்.பொன்னம்பலம் இராமநாதன் ஆற்றுகை மற்றும் காண்பியக் கலைகள் பீடமானது, முதலாவது பன்னாட்டு ஆய்வு மாநாட்டினை “ஆக்கக் கலைகளில் சமகாலச் சவால்கள்” என்னும் தொனிப் பொருளில் நடாத்துவதுடன் மேலும் உள்நாட்டு மற்றும் பன்னாட்டுக் கலைஞர்களை உள்ளடக்கியதான முத்தமிழ் கலை நிகழ்ச்சிகளையும் நடாத்த இருக்கின்றது.

### ஆய்வுத் தளங்களாக

01. நாடகப்பனுவலில் சூழ்நிலையும் உள்ளுரையும் 02. பாரம்பரிய அரங்கு 03. அரங்கில் காட்சி அமைப்பாக்கம் 04. நடிகரும் ஆற்றுவோரும் 05. சமூக மேம்பாட்டுக்கான அரங்கு 06. இலக்கியங்கள் மற்றும் கல்வெட்டுக்களில் நடனம் 07. சமகால பரதநாட்டியமும் நாட்டிய நாடகங்களும் 08. நாட்டுப்புறக் கலைகளில் ஆடல் வடிவங்கள் 09. அறிவியல் பார்வையில் உடற் செயற்பாடுகளும் நடனமும் 10. அழகியல் நோக்கில், அனுபவம் மற்றும் தத்துவத்தில் நடனம் 11. தொழில்நுட்பமும் இசை ஊடகமும் 12. தமிழரிசை 13. இசை மரபுகளும் சமூக உளவியற்பண்புகளும் 14. ஆலயங்களும் இசையும் 15. இசைக் கல்வியும் நாட்டுப்புற இசையும் 16. சமகாலக் கலைகள் 17. கலையும் பண்பாடும் 18. சமூக ஊடகமும் கலையும் 19. வர்த்தக ஓவியங்கள் 20. உள்நாட்டுக் கைவினைப் பாரம்பரியங்கள் 21. பொதுவெளிச் சிற்பங்கள் 22. கருத்தியல் சிற்பங்கள் 23. கழிவுப் பொருட்சிற்பங்கள்

இவ் ஆய்வுத் தளங்களில் ஆய்வுகள் அமையலாம்.

### கட்டுரை அமையவேண்டிய முறை

ஆய்வுக் கருப்பொருளுக்கு ஏற்ப ஆய்வுத்தடங்களுக்கு அமைவாக துணைத் தலைப்புக்களில் ஆய்வுக்கட்டுரைகள் அனுப்ப முடியும். ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளரின் சொந்தப் படைப்பாக இருப்பதுடன் குறிப்பிட்ட ஆய்வுக்கட்டுரையோ அல்லது அதன் பகுதிகளோ வேறு ஆய்வரங்குகளுக்கு அனுப்பப்படாதவையாக இருத்தலும் வேண்டும்.

மொழிமூலம். : தமிழ், ஆங்கிலம் (UK English)

எழுத்துரு. : தமிழ் (Unicode), ஆங்கிலம் (Times New Roman)

### எழுத்துக்களின் அளவு

தலைப்பு: 14 (Bold). ஆய்வுச்சுருக்கம்: 10. கட்டுரை: 12. வரிகளின் இடைவெளி: 1.5. தாள்: A4. பக்கங்கள்: 08 முதல் 10 வரை.

### கட்டுரையின் அமைப்பு

தலைப்பு , ஆய்வுச்சுருக்கம் (250-300), திறவுச் சொற்கள் (5), அறிமுகம், இலக்கிய மீளாய்வு, ஆய்வு முறையியல், கலந்தாராய்வுகளும் பெறுபேறுகளும், முடிவுரையும் பரிந்துரைகளும், உசாத்துணைகள் (சான்றுகோள்கள் (citations) மற்றும் உசாத்துணைகள் Harvard முறைமையை பயன்படுத்த வேண்டும் )

ஆய்வாளர் / கள் உறுதியுரை படிவத்தை முழுமையாக பூரணப்படுத்தி அனுப்ப வேண்டும் .

### கவனத்தில் கொள்ளப்படவேண்டிய திகதிகள்

1) ஆய்வுக்கட்டுரைகளை சமர்ப்பித்தலுக்கான திகதி : 11.03.2024

2) ஆய்வுக்கட்டுரைகளை சமர்ப்பித்தலுக்கான முடிவுத்திகதி : ~~28.04.2024~~ 15.05.2024

3) ஆய்வுக்கட்டுரைகளை ஏற்றுக்கொண்டமைக்கான திகதி : ~~27.05.2024~~ 05.06.2024

4) பதிப்பிற்காக சமர்ப்பிக்கும் இறுதித்திகதி : ~~07.06.2024~~ 17.06.2024

5) மாநாட்டு நாள் : 26.07.2024

### கட்டண விபரம்

உள்நாட்டு

ஆய்வாளர்கள் - 5000 LKR

மாணவர்கள் - 1000 LKR

பன்னாட்டு ஆய்வாளர்கள் - 30 US$

தெற்காசிய நாட்டு (SAARC) ஆய்வாளர்கள் - 20 US$

### கட்டுரை அனுப்பும் முறை

இணையத்தளம் : C.M.T (Conference Mangement Tool)

மின்னஞ்சல் : ircpva@univ.jfn.ac.lk

### தொடர்புகளுக்கு

கருத்தரங்கச் செயலாளர்.
சேர்.பொன்னம்பலம் இராமநாதன்
ஆற்றுகை மற்றும் காண்பியக் கலைகள் பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
மருதனார்மடம், இலங்கை.

மின்னஞ்சல் : suriyas@univ.jfn.ac.lk

கைபேசி: 0094 772100972

மேலதிக விபரங்களுக்கு http://www.sprpcu.jfn.ac.lk